# கொழும்பு ஒப்பந்தம்



தலைவர் கலைஞர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பு ஒப்பந்தம்

பொது சன நூலகம்
26 FEB 1997
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

தலைவர்

கலைஞர்

118830

—: வெளியீடு :—

திராவிட முன்னேற்றக் கழகம்

" அன்பகம் "

தேனாம்பேட்டை : : சென்னை - 600 018.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© முதல் பதிப்பு — 1987

320.512

விலை ரூ. 1-00

அச்சிட்டோர் : ஜெம் பிரஸ், சென்னை - 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

# இந்நூல் ...

கொழும்பு ஒப்பந்தம் குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் முரசொலி இதழில் 20-7-87 ஆம் தேதி முதல் 12-8-87 ஆம் தேதி வரை "கரிகாலன் பதில்கள்" என்ற தலைப்பில் தெரிவித்த விளக்கங்கள் இந்த நூல் வடிவில் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.

தலைமைக் கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு ஒப்பந்தம்

## தலைவர் கலைஞர்

**கேள்வி :**

இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே; மீண்டும் பேச்சு வார்த்தை என்ற பல்லவியைப் பாடத் தொடங்கியிருக்கிறாரே?

**பதில்:**

அவர் பாடுகிற பாட்டுக்குத் தலையாட்டுவதற்கு இந்திய அரசு தயாராக இருக்கும்போது; மேலும் இலங்கை தமிழினத்தை அழிக்கவும் — தமிழ் ஈழம் அமையாமல் தடுக்கவும் அவர் எந்தப் பல்லவியை வேண்டுமானாலும் பாடுவார்!

**கேள்வி:**

இலங்கைச் சிங்கள அரசின் பிரேரணையை ஈழ விடுதலைப் போராளிகள் ஒத்துக் கொள்வார்களா?

**பதில் :**

அதுபற்றி எனக்கு தெரியாது. ஆனால் ஒன்று; இப்போது இலங்கை அதிபர் வைத்துள்ள பிரேரணையை ஒத்துக் கொள்வதற்கு இத்தனை ஆயிரம் அப்பாவித் தமிழர்களையும் — நூற்றுக்கணக்கான போராளிகளையும் ரத்தவெள்ளத்தில் பிணங்களாக மிதக்க விட்டிருக்க வேண்டியதில்லை. திரு. அமிர்தலிங்கம் அவர்கள் மேற்கொண்டிருந்த காந்தீயவழிப் போராட்டத்தின் மூலமே இந்த அளவு சாதனையைச் செய்திருக்க முடியும் என்பதே எனது கருத்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:**

இறுதியாக "தனித்தமிழ் ஈழம்" இல்லாமலே போய் விடும் போலிருக்கிறதே?

**பதில்:**

அப்படியொரு முடிவு ஏற்பட்டால்; "தனித்தமிழ் ஈழத்தை ஆதரிக்க மாட்டோம்" என்று மத்திய காங்கிரஸ் அரசும் மாநிலத்தில் எம். ஜி. ஆர் அரசும் ஆரம்பத்திலிருந்தே சொல்லி வந்ததை நிலைநாட்டுவதில் வெற்றி பெற்று விட்டன என்றுதான் அர்த்தம்!

**கேள்வி:**

ஜெயவர்த்தனே ஒரு திட்டத்தை அறிவிப்பதும் — அதையேகூட ஏற்க முடியுமா; என்று ஈழப்போராளிகள் அதிருப்தியுடன் இருக்கும் நிலையில்; இலங்கையில் உள்ள பிரேமதாசா போன்றவர்கள் கடுமையாக எதிர்ப்புக் குரல் கொடுப்பது எப்படியிருக்கிறது ?

**பதில்:**

பிள்ளையையும் கிள்ளி விட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிற கலையில் திறமை மிக்கவர் ஜெயவர்த்தனே என்பதை மறந்து விடக்கூடாது.

**கேள்வி:**

இலங்கைத் தமிழர் பிரச்சினைபற்றி இன்றைய நிலையில் தங்களின் கருத்து என்ன?

**பதில்:**

கடந்த பிப்ரவரி மாதம் 10-ந்தேதி சென்னையில் நடைபெற்ற தி. மு. க. நிர்வாகக் குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மான வாசகத்தை இப்போது ஒருமுறை படித்துப் பார்ப்பது நல்லது; இதோ அந்தத் தீர்மானம்:-

இலங்கையில் 1983-ஆம் ஆண்டு நடைபெற்ற தமிழ் இனப்படுகொலை; மூன்றுண்டுகளுக்குப் பிறகு இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது தமிழ் இனத்தை அடியோடு அழிக்கும் சிங்கள இராணுவப் படையெடுப்பாகவே மாற்றம் பெற்று அன்றுடம் தமிழ் போராளிகளைத் தாக்குவது மட்டுமின்றி அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்று குவித்தும் உணவுப் பொருள்கள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் தமிழர்கள் வாழும் பகுதிக்கு செல்லாமல் தடுத்தும், நிறுத்தியும் அவர்களை பட்டினி போட்டுப் பணிய வைக்கும் ஈவு இரக்கமற்ற அராஜக நடவடிக்கைகள் தொடர் நிகழ்ச்சிகளாகி வருகின்றன.

இந்தப் பிரச்சினையில் இந்திய அரசு மத்தியஸ்தர் என்ற நிலையை மேற்கொள்ளாமல் இலங்கையில் சீரழியும் தமிழ் இன மக்களுக்காக வாதாடும் நிலையையும் உரிய நடவடிக்கைகளை அதற்கென மேற்கொள்ளும் நிலையையும் எடுக்க வேண்டுமெனத் தமிழ்நாட்டு மக்களும், இந்திய நாட்டு அரசியல் தலைவர்கள் பலரும் கலந்து கொண்ட மதுரை டெசோ மாநாடும், குறிப்பாகத் தி. மு. கழகமும் வலியுறுத்தியபோதெல்லாம் அதனை அலட்சியப்படுத்தி விட்டு பேச்சு வார்த்தைகள், வட்டமேஜை மாநாடுகள் என்று கண்துடைப்பு வேலைகளைக் காட்டியே காலத்தைக் கடத்தி; அப்பொழுதே நாம் சுட்டிக் காட்டியதைப்போல் இடையில் கிடைத்த ஏராளமான அவகாசத்தைப் பயன் படுத்திக் கொண்டு சிங்கள அரசு; வெளிநாட்டு ஆயுதங்களையும் தளவாடங்களையும், வேறு பல உதவிகளையும் குவித்துக் கொண்டு, இன்று இராணுவத்தை முடுக்கிவிட்டும் விமானங்களைப் பறக்கவிட்டும் தமிழ் இன மக்கள் மீது குண்டுகளைப் பொழியும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து விட்டது.

இப்படியொரு மெத்தனத்தின் வாயிலாகச் சிங்கள அரசு தனது வலிவைப் பெருக்கிக்கொள்ள இந்திய அரசு இடமளித்ததுடன் இங்குள்ள எம்.ஜி. ராமச்சந்திரன் அரசோ தனது பங்கிற்கு தமிழ்ஈழப் போராளிகளை பலவீனப் படுத்த அவர்களுக்குள்ளாகவே பகையை மூட்டிக் கலகம் விளைவித்து அவர்களின் ஒற்றுமையைக் குலைத்து, போரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளிகள் என்றாலே தமிழ் நாட்டு மக்களிடையே ஒருவித சலிப்பும் கசப்பும் ஏற்படத் தக்க சூழலையும் மிகச் சாதுர்ய மாக உருவாக்கி முடித்து விட்டது.

மத்திய மாநில அரசுகளைப் பெரிதும் நம்பியதோடு அதிகாரப் பொறுப்பில் இருக்கும் அவற்றின் உதவியோடு ஈழத்தமிழர் உரிமைகளைப் பெறமுடியும் என்று இறுதிவரை எண்ணியிருந்த தமிழ் ஈழத் தலைவர்களும் தமிழ் ஈழப் போராளிகளும் இன்று பெரும் ஏமாற்றத்துக்கு ஆளாகி நொந்து போய் நிற்கின்றனர்.

தமிழ்ப் போராளிகளைக் கைது செய்தும் அவர்களிட மிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றியும் தொடர்புக் கருவி களைக் கூடக் கைப்பற்றியும் கிரிமினல் கைதிகளைப்போல அவர்களை நடத்தியும் அவர் தம் அசைவுகளை வீடியோ படமாக எடுத்தும், அடைக்கலமென வந்தவர்களை அலைக் கழித்து அதுவும் போதாமல் பொய் வழக்குகளை அவர்கள் மீது புனைந்து போராளிகளுக்குள்ளேயே முட்டி மோதிக் கொள்கிற சூழ்ச்சிகளையும் வகுத்து அவர்களை எம். ஜி. ராமச்சந்திரன் அரசு [படுத்தியபாடு கொஞ்சநஞ்சமல்ல! இன்னமும்கூட போராளிகள் தமிழ்நாட்டில் பழிவாங்கப் படுகிறார்கள் என்பதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் உண்டு.

அண்மையில் பெங்களூரில் மத்திய அமைச்சர்களும் தமிழக முதல்வர் எம். ஜி. ராமச்சந்திரனும், புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனும் கலந்துகொண்ட பேச்சு வார்த்தையில் இரண்டாக இருக்கும் தமிழ்ஈழத்தின் வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒன்றாக இணைக்க வேண்டுமென்ற தமிழர்களின் கோரிக்கைக்கு நேர்மாறாக— இரண்டை நாலாகக் கூறுபோடும் யோசனை இலங்கை அரசால் கூறப்பட்டு அதனை ஏற்றுக் கொள்ள வேண்டு மென்று நமது மத்திய மாநில அரசுகளால் திரும்பத்திரும்பக் கூறப்பட்டு அதனைப் போராளிகளின் சார்பில் பிரபாகரன் ஏற்க மறுத்து விட்டதை அவரே பத்திரிகைப் பேட்டி யொன்றில் குறிப்பிட்டிருப்பதோடு;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பேட்டியில் தமிழ்நாட்டு எம்.ஜி. ராமச்சந்திரன் அரசின் போலீசார்; தங்களைக் கிரிமினல் கைதிகளைப்போல நடத்தினார்கள் என்பதையும் வெளியிட்டிருப்பதிலிருந்து எம். ஜி. ராமச்சந்திரன் அரசையும், மத்திய அரசையும் நம்பி இருந்த போராளிகள் எப்படி வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற உண்மை தெளிவாகிறது.

நயவஞ்சகத்தின் மூலம் புலிகள் இயக்கத்தையும் பழி வாங்குதல், வழக்கு தொடுத்தல் மூலம் டெலோ இயக்கத்தையும் — கலகமூட்டி மோதவிடுவதின் மூலம் மற்ற போராளிகளின் இயக்கங்களையும் திட்டமிட்டு குலைத்துவிட எம். ஜி. ராமச்சந்திரன் அரசு முயன்று அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுவிட்டது.

எம். ஜி. ராமச்சந்திரன் அரசின் இந்த சதிச் செயலும் அதனைக் கண்டும் காணாதது போல் நடந்து கொண்ட மத்திய அரசின் போக்கும் இன்றைக்கு ஈழத்தமிழ் இனத்தை இறுதிக்கட்டத்தின் விளிம்பிலே நிறுத்தி வைத்துள்ளது.

இன்று நேற்றல்ல; 1958ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே இலங்கைத் தமிழர்களுக்காக குரல் எழுப்பி வருவது தி. மு. கழகம்.

அதன் தொடர்ச்சியாகத்தான் 1983-ல் நடைபெற்ற இலங்கைத் தமிழ் இனப்படுகொலைச் செய்தி கேட்டு தி. மு. கழகம் ஆர்த்தெழுந்து சிங்கள அரசின் வெறியாட்டத்தைத் தடுத்து நிறுத்த மத்திய மாநில அரசுகளை வலியுறுத்தும் வகையில் தனித்து நின்றும், ''டெசோ'' இயக்கச் சார்பிலும் பல போராட்டங்களை நடத்தியுள்ளது.

மத்திய மாநில அரசுகள் விளம்பரப்படுத்திய பேச்சு வார்த்தைகள் என்ற அறிவிப்புகளை தமிழ் மக்களில் ஒரு சாரார் உண்மையென நம்பி, நல்ல விளைவுகள் ஏற்படுமென எதிர்பார்த்த காரணத்தால் அதற்கு குறுக்கே நிற்க வேண்டாமென தி. மு. கழகம் கருதியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், இன்று இலங்கையில் நிலைமை முற்றிலும் படுமோசமாகி, ஈழத்தமிழர்கள் சிங்களப் பட்டாளத்தின் குண்டு வீச்சுகளுக்கிடையே குருதிவெள்ளத்தில் பிணமாக மிதக்கின்றனர்.

இந்திய அரசு காட்டிய மெத்தனப் போக்கினாலும், இந்தப் பிரச்சினையில் உண்மையான அக்கறையற்ற எம்.ஜி. ராமச்சந்திரன் அரசு ஆடிய நாடகத்தாலும், இலங்கையில் நமது தமிழ் இனம் நாள்தோறும் அழிந்து கொண்டிருக்கிறது என்ற வேதனையை தி. மு. கழகத்தின் இந்த நிர்வாகக் குழு வெளிப்படுத்துவதோடு; இலங்கையில் தமிழ் இன அழிவை தடுத்து நிறுத்த மத்திய அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள மனிதாபிமான உணர்வோடும் இதயசுத்தியோடும் உடனடியாக முன்வர வேண்டுமென வலியுறுத்துகிறது''.

இப்படியொரு தீர்மானத்தை அன்றைக்கே நிறைவேற்றியது; தி. மு. கழகம்—இப்பொழுதும் மத்திய மாநில அரசுகள் இதயசுத்தியோடு நடந்து கொள்ளவில்லையென்பதுதான் கழகத்தின் கருத்து.

கேள்வி :

''அரசியல் நாணயம் சிறிதுமில்லாத சிங்கள ஆட்சியாளருடன் அவசரக்கோலத்தில் செய்யப்படும் எந்த உடன்படிக்கையும் ஏமாந்த தமிழனின் வரலாற்றில் இன்னொரு சோணகிரி அத்தியாயமாகவே அமையும்'' என்று உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அறிக்கை விட்டுள்ளாரே?

பதில் :

தமிழின உணர்ச்சியுள்ள ஒவ்வொருவரும் இப்போது செய்யப்படும் அவசர ஒப்பந்தம் குறித்து இப்படித்தான் கருதுவார்கள்! இப்படித்தான் கருத முடியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி:

ஈழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் டெல்லி அசோகா ஓட்டலில், நிருபர்களோ, வெளியார் யாருமோ சந்திக்க முடியாதபடி எல்லாத் தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு பாதுகாப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தியும் —பிறகு பிரபாகரன் இலங்கையுடன் ராஜீவ் காந்தி செய்து கொள்ளும் ஒப்பந்தத்திற்கு சம்மதம் தெரிவித்துவிட்டதாக ஒரு செய்தியும் வந்துள்ளது, பற்றி?

பதில்:

யு.என்.ஐ, பி.டி.ஐ. செய்தி நிறுவனங்கள் 28-7-87 இரவு 8 மணியளவில் கொடுத்த செய்தியின்படி இந்தக் கேள்வியின் முதற்பகுதி உண்மை! இந்தக் கேள்வியின் இரண்டாவது பகுதியைப் பற்றிய உண்மை எதுவும் சரியாகத் தெரியவில்லை! மாலையில் விடுதலைப்புலி இயக்கத் தலைவர் பிரபாகரனால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாது எனப் புறக்கணிக்கப்பட்ட அதே ஒப்பந்தத்தை அவர் இரவு ஏற்றுக் கொண்டார் என்பது புதிராக இருக்கிறது. இது குறித்து இன்னும் விளக்கமான செய்திகள் வந்த பிறகே எந்த முடிவுக்கும் வர முடியும்.

கேள்வி:

டெல்லியில் "மொசாட்" போன்ற அந்நிய நாட்டு உளவாளிகளால் ஆபத்து ஏற்படும் என்றுதான் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் தங்கியுள்ள டெல்லி அசோகா ஓட்டலில் பலத்த பாதுகாப்பை இந்திய அரசு போட்டுள்ளது என்று வந்துள்ள செய்திகள் பற்றி ?

பதில்:

அப்படியானால் புலிகள் இயக்கத்தின் தலைவர்களை பத்திரிகை நிருபர்கள் சந்திப்பதற்கோ, அல்லது மாநிலங்களவை உறுப்பினர் வை. கோபால்சாமி சந்திப்பதற்கு சென்ற போதோ; தடுக்கப்பட்டதற்கு என்ன காரணம்? கோபால்சாமி எம். பி. யும், டெல்லி பத்திரிகை நிருபர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட "மொசாட்" போன்ற அந்நிய நாட்டு உளவாளிகள் என்று இந்திய அரசு கருதுகிறதா? "கறுப்புப்பூனைகள்" எனப்படும் அதிரடிப் படையினரை வைத்து இப்போது அந்த போராளித் தலைவர்களைப் பாதுகாக்கிற அரசு; அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து சென்னைக்குத் தனி விமானத்தில் அழைத்து வரப்பட்டபோது சென்னையில் அந்த "கறுப்புப்பூனைப்" பாதுகாப்பை ஏன் தரவில்லை? சென்னை விமான நிலையத்திலே கூட, பிரபாகரனையும் அவருடன் வந்த போராளிகளையும் பத்திரிகை நிருபர்கள் பேட்டி கண்டுள்ளார்களே; இப்போது ஏன் அந்த நிருபர்களுக்கு டெல்லியில் அவர்களைப் பேட்டிகாண அனுமதியில்லை? ஏதோ ஒரு நிர்ப்பந்தம் நடத்தப்படுகிறது டெல்லியில் என்ற உண்மையை; சிந்திக்கத் தெரிந்தவர்களின் மத்தியிலே யாராலும் மறைத்து விட முடியாது!

**கேள்வி:**

ஒப்பந்தத்திற்கு எதிராக இலங்கையில் சிங்களவர் நடத்தும் வன்முறைக் கிளர்ச்சி பற்றி ஒரு நிருபர் கேட்ட போது; "அறியாமையின் காரணமாக இந்தக் கலவரங்கள் நடக்கின்றன" என்று இலங்கை அதிபர் ஜெயவர்த்தனா பதில் கூறியுள்ளாரே?

**பதில்:**

எதிர் காலத்தில் இலங்கைத் தமிழினத்தைப் பெரும் ஏமாற்றத்துக்கு உள்ளாக்குகிற ஒரு ஒப்பந்தத்திற்கு அவரும் ராஜீவ் காந்தியும் உலகளாவிய விளம்பரம் தந்து கையொப்பமிட்டிருப்பதில் உள்ள "ரகசியத்தை" சிங்களவரே புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்கிறார்களே என்பதை எண்ணி ஜெயவர்த்தனா; இப்படியொரு பதிலைச் சொல்லியிருக்கக் கூடும்.

**கேள்வி :**

ஒரு விதமான கடும் நெருக்கடிக்கு ஆளாக்கி இலங்கைத் தமிழின மக்கள்மீது வலுக்கட்டாயமாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்

திணிக்கப்படும் இந்த ஒப்பந்தத்தில் எம். ஜி. ஆர். அரசின் பங்கு என்ன?

**பதில்:**

தமிழக அரசின் சார்பாக ஒரு அமைச்சரே இலங்கைக்குச் சென்று; ஒப்பந்தம் கையெழுத்துப் போட்டு முடிந்ததும்—பலமாகக் கையொலி செய்து மகிழ்ச்சி தெரிவித்தாரே—தொலைக்காட்சியில் கூட அந்த நிகழ்ச்சி காட்டப்பட்டதே! எம்.ஜி.ஆர் அரசின் பங்கு குறித்து இன்னும் என்ன சந்தேகம்?

**கேள்வி:**

ஜெயவர்த்தனு செய்துள்ள ஒப்பந்தம் தவறு என்று திருமதி பண்டாரநாயகா போர்க்குரல் கொடுக்கிருரே?

**பதில்:**

மலையளவுள்ள தமிழர்களின் கோரிக்கையில் கடுகளவு நிறைவேற்றப்படுமென சிங்கள அரசு எப்போது ஒத்துக் கொண்டாலும் இலங்கையில் இப்படித்தான் சிங்களவர்களின் எதிர்ப்பு கிளம்பும்! இலங்கையில் சிங்கள மொழி, தமிழர்கள் மீது கட்டாயமாக எல்லாத் துறைகளிலும் திணிக்கப்பட்ட போது; அதை எதிர்த்து தந்தை செல்வ நாயகம் தலைமையில் அறவழிப் போராட்டம் நடத்தப் பட்டது. அதையொட்டி 1957ஆம் ஆண்டு ஜூலை மாதம் "பண்டாரநாயகா—செல்வநாயகம் உடன்படிக்கை" செய்து கொள்ளப்பட்டது. அப்போது அந்த உடன்படிக்கையை எதிர்த்து கொழும்பிலிருந்து கண்டி வரை ஜெயவர்த்தனு பாதயாத்திரை நடத்தினுர். அதன் காரணமாக தமிழினத்துக்கு விரோதமாகப் பல வன்முறை நிகழ்ச்சிகள் தூண்டிவிடப்பட்டன. பெரும் எதிர்ப்பு ஜெயவர்த்தனு போன்றவர்களால் அன்றைக்கு உருவாக்கப்பட்ட காரணத்தினுல் செல்வநாயகத்துடன் செய்து கொண்ட உடன்பாட்டைக் கைவிடுவதாக அன்றைய இலங்கைப் பிரதமர் பண்டார நாயகா அறிவித்து விட்டார். திரு. பண்டார நாயகா செய்து கொண்ட உடன்பாட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைக்கு ஜெயவர்த்தனு எதிர்த்துப் போராடினூர். இன்றைக்கு ஜெயவர்த்தனு செய்து கொண்ட உடன் பாட்டை திருமதி பண்டாரநாயகா எதிர்த்துப் போராடு கிருர். ஏதோ சில சலுகைகள், பதவிகள் இவற்றைப் பெற்றுக்கொண்டு இலங்கை சிங்கள அரசின் அடிமைகளாகத் தமிழ் ஈழமக்கள் வாழுகிற நிலைமை இருக்கும் வரையில்; அங்கே தமிழ் இனத்துக்கு விடிவுகாலம் இருப்பதாகத் தெரியவில்லை! கடந்த காலக் கசப்பான அனுபவங்கள் அதைத்தான் சுட்டிக் காட்டுகின்றன!

கேள்வி:

இலங்கைக்கு இந்திய ராணுவம் அனுப்பப்பட்டிருப்பது எதற்காக?

பதில்:

தன்னுடைய வேண்டுகோளின்படி இந்தியராணுவத்தினர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர் என்றும் அவர்கள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் சிங்கள தளபதிகளின் தலைமையில் செயல்படுவார்கள் என்றும் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனு அறிவித்துள்ளாரே — இதிலிருந்தே இந்திய ராணுவம் இலங்கைக்கு அனுப்பப்பட்டுள்ள நோக்கம் நன்ருகப் புரிந்திருக்குமே!

கேள்வி:

இலங்கை ஒப்பந்தத்தில் தமிழர்கள் வாழும் வடக்கு மாநிலமும் கிழக்கு மாநிலமும் நிரந்தரமாக இணைந்திருக்கும் என்று நிச்சயப்படுத்தாமல்; கிழக்கு மாநிலம் இப்போது வடக்கு மாநிலத்துடன் சேர்க்கப்பட்டாலும் — ஒரு வருடத்தில் கிழக்கு மாநிலத்தில் பொதுவாக்கெடுப்பு எடுக்கப்பட்டு அந்த முடிவுக்கேற்ப அதன் நிலைமை அமையும் என்று குறிக்கப்பட்டிருப்பது பற்றி?

பதில்:

இது கிழக்கு மாநில தமிழ் மக்களின் தலைக்கு மேல் தொங்கும் கத்தியாகும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:**

தமிழ் ஈழப் போராளிகளிடமிருந்து ஆயுதங்களைப் பெற்று அமைதியை நிலைநிறுத்துவதில் இந்தியப்படைப் பிரிவு உதவி புரியும் என்று செய்தி வந்துள்ளதே?

**பதில்:**

சிங்கள இராணுவத்தினருக்குச் சிரமமாக இருந்த காரியத்தைச் சுலபமாகச் செய்து கொடுக்க இந்தியராணுவம் உதவுகிறது என்பதுதான் உண்மை.

**கேள்வி:**

கொழும்பு நகரில் இந்தியப் பிரதமருக்கு நடைபெற்ற மரியாதை அணி வகுப்பில் கப்பற்படையைச் சேர்ந்த ஒருவன் இந்தியப் பிரதமரை தாக்கியது குறித்து?

**பதில்:**

கழகத்தின் சார்பில் ஏற்கனவே கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளேன். தமிழ் ஈழ விடுதலை அணியின் பொதுச் செயலாளர் ஈழ வேந்தன் குறிப்பிட்டுள்ளது போல; ஒரு நாட்டுப் பிரதமருக்கே இப்படியொரு நிலை ஏற்பட்டதென்றால் ஈழத் தமிழ் மக்கள் இதுவரையில் எத்தகைய இன்னல்களை அனுபவித்திருப்பார்கள் என்பதை உலகம் உணர வேண்டும்.

**கேள்வி:**

இலங்கையில் மிக முக்கிய பதவி வகிக்கும் பிரதமர் பிரேமதேசா உள்ளிட்ட நாலைந்து அமைச்சர்கள் எதிர்ப்பு காட்டியும் கூட; விடுதலைப் போராளிகளில் பெரும் பகுதியினர் ஏற்காத நிலையிலும் கூட; அவசர அவசரமாக இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்கள் கொழும்பு நகரில் பெருத்த அமளி—ஊரடங்குச் சட்டம் இவற்றுக்கிடையே—இப்படியொரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடச் சென்றது ஏன்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்:

பேர்பாக்ஸ், போபர்ஸ், சுவிஸ் விவகாரங்களைப் பின்னுக்குத் தள்ளலாம் என்ற நினைப்புத்தான்; இத்தனை நாளுமில்லாத இவ்வளவு அவசரத்துக்குக் காரணம் என்பது தெளிவாகவே புரிகிறதே!

கேள்வி:

யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டுள்ள இந்திய ராணுவத்தினர் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனேயின் கட்டளைப் படி இயங்குவார்கள் என்று இந்தியத் தூதர் தீட்சித் கொழும்பில் அறிவித்துள்ளாரே?

பதில்:

சிங்கள ராணுவத்தினர் தமிழினத்தின் மீது குண்டுகளை வீசி அழிப்பதைத் தடுத்துத் தமிழ் ஈழம் பெற்றுத் தர இந்திய ராணுவம் செல்ல வேண்டுமென்று நாம் கூறினோம்! ஆனால் இப்போது இந்திய ராணுவம் இலங்கை அரசின் கட்டளைக்குக் கீழ்ப்பட்டு நடக்க அனுப்பப்பட்டிருக்கிறது.

கேள்வி:

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இதுபோல் ஒரு திடீர் முடிவு ஏற்படக் காரணமென்ன?

பதில்:

திடீர்முடிவல்ல! திட்டமிட்டு நடத்தி எடுக்கப்பட்ட முடிவு! "விறகுகள் ஒரே கட்டாக இருந்தவரையில் அந்தக் கட்டை முறிக்க முடியவில்லை — கட்டு அவிழ்க்கப்பட்டு தனித் தனியாக ஆனதும் — ஒவ்வொரு விறகாக எடுத்து முறிப்பது சுலபமாகி விட்டது" என்று பாலபாடத்தில் கதை படித்திருக்கிறோமல்லவா? அந்தக் கதையைத்தான் ஜெயவர்த்தனா, ராஜீவ்காந்தி, எம். ஜி. ஆர். மூவரும் சேர்ந்து இலங்கைத் தமிழர் பிரச்சினையில் வெற்றிகரமாக நடத்தி முடித்து விட்டார்கள். இந்த உண்மையை நான் இன்றைக்குச் சொல்லவில்லை; நான்காண்டு காலமாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி எச்சரித்து வருகிறேன். என் செய்வது; தமிழினத்தின் "தலைவிதி" எப்போதுமே இப்படித்தானே—வரலாற்று ரீதியாகவும்கூட!

**கேள்வி:**

ஜெயவர்த்தனுவின் அரசியல் சாணக்கியத்தை பிரதமர் ராஜீவ் காந்தி; நாடாளுமன்றக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் வெகுவாகப் பாராட்டிப் பேசியுள்ளதாக ஏடுகளில் செய்தி வந்துள்ளதே?

பதில்:

இலங்கையில் தமிழ் ஈழப்போராளிகளின் கல்லறைகளும், கற்பிழந்த தமிழச்சிகளின் பிணங்கள் புதைக்கப்பட்ட அல்லது எரிக்கப்பட்ட இடங்களும், கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்கள் மொத்தமாகப் புதைக்கப்பட்ட புதை குழிகளும் — ராஜீவ் காந்தியின் இந்தப் பாராட்டுரையைக் கேட்க இயலுமேயானல் கண்ணீரை அருவியாகக் கொட்டும்! "அட நாதியற்ற தமிழச் சாதியே!" என்று கதறியழும்!

கேள்வி:

இப்பொழுது இலங்கையின் ஈழப்பகுதியில் என்ன நடக்கிறது?

**பதில்:**

இலங்கை ராணுவத்துக்கு பதிலாக இந்திய ராணுவம் தமிழ் ஈழவிடுதலைப் புலிகளைத் தாக்குவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது!

**கேள்வி:**

"தாங்கள் கோரியதற்கு அதிகமாகவே தமிழர்களுக்குக் கிடைத்துள்ளது. எனவே அவர்கள் புகார் செய்வதற்கு எதுவுமில்லை" என்று அலகாபாத்தில் ஒரு விழாவில் பேசிய ராஜீவ் காந்தி அவர்கள் கொழும்பு ஒப்பந்தம் குறித்துக் கூறியுள்ளாரே?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
118830

பதில்:

அவர்கள் கோரியது தமிழ் ஈழம் என்ற தனி நாடு! அந்தத் தனி நாட்டில் வடக்கு கிழக்கு மாநிலங்கள் இணைந் திருக்க வேண்டுமென்பது! இப்போது கிழக்கு மாநிலத்தை பற்றிய உத்திரவாதம் பொது வாக்கெடுப்பில் தொங்கிக் கொண்டிருக்கிறது—தனி நாடு கிடைக்கவில்லை என்பது மாத்திரமல்ல; அமைய இருக்கும் தமிழ் மாநிலத்துக்குச் சுய நிர்ணய உரிமையோ—அல்லது குறைந்தபட்சம் மாநில சுயாட்சி அந்தஸ்தோகூட தரப்படவில்லை. இந்த நிலையில் தாங்கள் கோரியதற்கு அதிகமாகவே தமிழர்களுக்குக் கிடைத்துள்ளது என்பது ஏற்றுக் கொள்ள முடியாத கருத்து!

கேள்வி:

கொழும்பு ஒப்பந்தம்—யாருக்கு ஆதாயம்?

பதில்:

நிச்சயமாக ஜெயவர்த்தனுவுக்குத்தான்! ஜெயவர்த்த னுவின் ஆட்சியைக் கவிழ்க்கக் கூடிய பயங்கரப் புரட்சி யொன்றுக்கு இலங்கையில் ஒரு சதி உருவாகிக் கொண் டிருந்தது. அதைச் சமாளிக்க ஜெயவர்த்தனு திணறிக் கொண்டிருந்தார். காரணம் அந்தச் சதிகாரர்கள் பலர் இலங்கைராணுவத்தில் ஊடுருவியிருந்தார்கள். இலங்கை யின் ராணுவமும் பெரும் அமளிகளை அடக்குகிற அளவுக்கு திறமைபெற்றதாக இல்லை. ஆட்சியைக் கவிழ்க்க திட்ட மிட்ட சதிகாரர்களை ஒடுக்க வேண்டுமென்பதற்காகவும்—அதே நேரத்தில் தமிழ் ஈழப் போராளிகளின் ஆயுதங் களைப் பறித்து அவர்களையும் செயலற்றவர்களாக்க வேண்டுமென்பதற்காகவும்—அவசர அவசரமாக இந்தியா வுடன் ஒரு ஒப்பந்தத்தை செய்து கொண்டு—அதன் தொடர்பாக இந்திய இராணுவத்தை இலங்கையில் குவித்து வைத்துக்கொண்டு; அது தன் கட்டளைப்படி இயங்கக்கூடிய சூழ்நிலையையும் உருவாக்கிக் கொண்டு, தமிழ்ப் போராளிகளையும்; தன் ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண



தெழுந்துள்ள சதித் திட்டத்தையும் இந்திய ராணுவத்தின் மூலமே தாக்குப்பிடிக்கும் முயற்சியில் வெற்றி பெற்று விட்டார். எனவே கொழும்பு ஒப்பந்தம் என்பது ஜெயவர்த்தனுவுக்கு லாபம் தரக்கூடிய ஒப்பந்தம்! தற்காலிகமாக பேர்பாக்ஸ், போபர்ஸ், சுவிஸ் வங்கி விவகாரங்களை திசை திருப்ப ஓரளவுக்கு ராஜீவ்காந்திக்கும் பயன்படுகிற ஒப்பந்தம்!

கேள்வி:

விடுதலைப்புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரனும் அந்த இயக்கத்தவரும் தி. மு. கழகத்தை மதிக்காத நிலையில் நடந்து கொண்டார்களே; இப்போது வெளியிடப்படுகிற உங்களின் கருத்துக்கள் பிரபாகரனையும் அவரது புலிகள் இயக்கத்தையும் ஆதரிக்கும் வகையில் அமைந்துள்ளதே?

பதில்:

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு பிப்ரவரி மாதம் பத்தாம் தேதியன்று சென்னையில் கூடிய தி.மு.க. நிர்வாகக் குழுவில் நிறைவேற்றிய தீர்மானத்தை நினைவுக்குக் கொண்டுவந்தால் யாருக்கும் இப்படியொரு சந்தேகம் எழாது! அந்தத் தீர்மானத்திலேயே பிரபாகரனும் அவரது இயக்கமும் மத்திய—மாநில அரசுகளால் எப்படியெல்லாம் அலைக்கழிக்கப்பட்டனர் என்பதையும்-பொதுவாகப் போராளிகளிடமிருந்த ஒற்றுமையை மத்திய—மாநில அரசுகள் எவ்வாறு திட்டமிட்டு சீரழித்தன என்பதையும் விளக்கமாகக் கழகம் சுட்டிக்காட்டியிருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் பிரபாகரன் என்ற தனிப்பட்ட ஒருவரோ அல்லது அவரது இயக்கத்தினரோ நமது கழகத்தை மதிக்கிறார்களா அல்லவா என்பது முக்கியமல்ல! இலங்கையில் தமிழின அழிவையும் — அவர்களது உரிமைகள் உடமைகள், பறிக்கப்படுகிற கொடுமையையும் தமிழ்க் குருதியோடுகிற நம்மால் எப்படிப் பொறுத்துக் கொண்டிருக்க முடியும் என்பதே முக்கியம்! உலகில் எங்கே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
118830

தமிழினம் ஏமாற்றப் பட்டாலும் — எச்சரிக்க வேண்டியது நமது கடமை! எங்கே தமிழினம் திட்டமிட்டு நசுக்கப்பட்டாலும் — எதிர்ப்புக் குரல் கொடுப்பது நம்மோடு பிறந்த உணர்வு இப்போது அந்தக் கடமையைச் செய்கிறோம்— அந்த உணர்வை வெளிப்படுத்துகிறோம்; அவ்வளவுதான்!

கேள்வி:

கொழும்பு ஒப்பந்தத்தில் கையெழுத்துப்போடும் விழாவை முடித்துவிட்டு; அதன்பிறகு போராளிகள் இயக்கத்தினரை அதற்கு ஒப்புதல் தருமாறு வற்புறுத்துவது எப்படியிருக்கிறது?

பதில்:

கொடுமைக்காரனுக்கு ஒரு பெண்ணை; அவள் விருப்பமில்லாமலே திருமணம் செய்து வைத்து விட்டு அதன் பிறகு "அவனோடு சேர்ந்து வாழ" என்று அந்தப்பெண்ணைக் கொடுமைப்படுத்துவதைப் போல இருக்கிறது!

கேள்வி:

கொழும்பு ஒப்பந்தத்தை விடுதலைப் புலிகள் இயக்கமும், கடைசியாக ஒத்துக் கொண்டால்?

பதில்:

யார் ஒத்துக் கொண்டாலும் சரி; இந்த ஒப்பந்தம் குறித்து ஆரம்பத்திலிருந்து கழகத்தின் சார்பில் எடுத்து வைக்கப்பட்டுள்ள கருத்துக்கள் அப்படியே இருக்கின்றன. அதில் மாற்றமில்லை.

கேள்வி:

"ஸ்ரீலங்கா (இலங்கை) தேசிய நீரோட்டத்துடன் ஈழ விடுதலைப் போராளிகளை இணைப்பதற்கான முயற்சிகள் நடைபெறும்" என கொழும்பு ஒப்பந்தத்தையொட்டி செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது குறித்து?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதில்:

எள்ளின் முனையளவுக்கும் குறைவான அளவில் இலங்கைத் தமிழர்களுக்குச் சாதகமாக அமைந்துள்ள தாகக் கருதப்படும் இந்த அவசர ஒப்பந்தத்திற்கே மறுப்பும் எதிர்ப்பும் தெரிவித்து சிங்களவர் அங்கே ரத்த ஆறுகளைப் பெருக்கெடுக்க விட்டுக்கொண்டிருக்கின்றனர். அதனல் அங்கே "நீரோட்டம்" எதுவும் இல்லை! தேசியத்தின் பெய ரால் குருதிதான் தெருக்களில் ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த அழகில் "ஸ்ரீலங்கா" வில் தேசியமாவது; வெங்காய மாவது; என்றுதான் பெரியார் அவர்களின் பாணியில் நாமும் திருப்பிக் கேட்க வேண்டியிருக்கிறது.

கேள்வி:

ஸ்ரீலங்கா தேசிய நீரோட்டம்; என்பது ஒரு புறமிருக் கட்டும்—இந்தியாவில் தேசிய நீரோட்டம் என்று இந்திரா காங்கிரசார் மூச்சுக்கு முந்நூறு தடவை சொல்கிருர்களே; அதற்குப் பொருள் என்ன?

பதில்:

அட; இது தெரியாதா? மிகவும் சுலபமாகப் பொருள் விளங்கக்கூடிய விஷயமாயிற்றே இது!

(அ) வடக்கேயுள்ள மக்களின் பிரச்சினையென்ருல் பாகிஸ்தான் மீது படையெடுத்துச் சென்று தனிநாடாக "பங்களாதேஷ்" என்ற நாட்டையே அமைத்துத் தருவது; தெற்கே தமிழின மக்களுக்குப் பிரச்சினையென்ருல் அந்த இனத்தையே அழிக்க முற்பட்ட இலங்கை அரசுடன் கைகோத்துக் கொண்டு தமிழனுக்கு இலங்கையிலே மாநில சுயாட்சி உரிமையுள்ள ஒரு மாநிலம் அமைத்துத் தரக்கூட முயற்சி மேற்கொள்ளாமல் கைவிட்டு விடுவது—

(ஆ) வடக்கே உ.பி, பீகார் போன்ற மாநிலங்களில் பேசப்படும் இந்தி மொழியை—அந்த மொழியின் ஆதிக் கத்தையே விரும்பாமல் ஐம்பது ஆண்டுக்கு மேலாக


118839
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் மக்கள்மீது திணித்து அவர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக ஆக்குவது; இந்த நிலைமைகளுக்குப் பெயர்தான் "இந்தியாவின் தேசிய நீரோட்டம்"

**கேள்வி:**

கொழும்பு ஒப்பந்தத்தை மறுத்தது மட்டுமன்றி; இந்தியப் பிரதமரின் கொழும்பு வருகையின் போது அவரது வரவேற்பு முதலிய எல்லா நிகழ்ச்சிகளையும் புறக்கணித்த இலங்கைப் பிரதமர் பிரேமதேசா உள்ளிட்ட நாலைந்து அமைச்சர்கள் மீது அதிபர் ஜெயவர்த்தன எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லையே; ஏன்?

பதில்:

இதையெல்லாம் பார்க்கும்போதுதான் கொழும்பு ஒப்பந்தம் குறைபாடுகள் மலிந்தது என்பது மட்டுமல்ல; தூய்மையான உள்ளத்தோடு போடப்பட்ட ஒப்பந்தமும் அல்ல என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

கேள்வி.

கொழும்பு ஒப்பந்தம் ஒரு சரித்திரப் புகழ் வாய்ந்தது என்றும்—இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணும் ஒப்பந்தம் என்றும்—ஆகையால் அந்த உடன்பாட்டை அனைவரும் ஆதரிக்க வேண்டும் என்றும்—போராளிகளும் உடன்பாட்டை மதித்து நடக்க வேண்டுமென்றும் தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் ராஜீவ் காந்தி அவர்களுடன் பேசிய கூட்டத்தில் அறிவித்துள்ளது பற்றி?

பதில்:

அடடே; நமது முதலமைச்சர் எம். ஜி. ஆர் அவர்கள் கொழும்பு ஒப்பந்தத்தை ஆதரிக்கிறார் என்பது இப்போது தான் தெரியுமா? அந்த ஒப்பந்தத்தை ஆதரித்து தமிழகம் முழுவதும் அவரது கட்சியின் சார்பில் விழாக்கள் நடத்தக் கூட அக்கட்சியின் தலைமை அறிவித்துள்ளதே—எதிர்காலத்தில் ஈழத்தமிழினத்துக்குப் பெரும் ஏமாற்றத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கப் போகும் இந்த ஒப்பந்தத்தின் மூலபுருஷர்கள் ஜெயவர்த்தன, ராஜீவ்காந்தி, எம்.ஜி.ஆர். ஆகிய மூவரும் தான்! ஒப்பந்தம் கொழும்பில் கையெழுத்தானபோது அருகில் நின்று கையொலி செய்த தமிழக அமைச்சரைத் தொலைக்காட்சிப் படத்தில்கூடப் பார்த்திருப்பீர்களே!

**கேள்வி:**

காஞ்சிபுரம் நகராட்சி மன்றத்தில் கொழும்பு ஒப்பந்தத்தை வரவேற்றுப் பாராட்டி அ. தி. மு. க. வும் இ. காங்கிரசும் கொண்டுவந்த தீர்மானத்திற்கு நகராட்சி மன்ற (தி. மு. க.) தலைவரும் நகராட்சி மன்ற (தி. மு. க.) உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்து ஏகமனதாக நிறைவேற்றியுள்ளார்களே?

**பதில்:**

அது குறித்துத் தலைமைக் கழகத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. பொதுச்செயலாளர் பேராசிரியர் அவர்களின் அறிக்கையிலும் காஞ்சிபுரம் நகராட்சித் தலைவர் மற்றும் கழக உறுப்பினர்களின் செயல் தவறானது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. காஞ்சி நகராட்சித் தலைவர் ராஜமாணிக்கம் அவர்கள் இன்று என்னையும், பேராசிரியர் அவர்களையும் சந்தித்து; தவறு நடந்து விட்டமைக்கு வருத்தம் தெரிவித்துக் கடிதம் கொடுத்துள்ளார்.

**கேள்வி:**

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஒப்பந்தம் கண்ட பிரதமர் ராஜீவ் காந்திக்கு பாலஸ்தீன விடுதலை இயக்க தலைவர் யாசர் அராபத் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்துள்ளாரே?

**பதில்:**

ஏன் பாராட்ட மாட்டார்? அவரது விடுதலை இயக்கத்தினரிடமிருந்து ஆயுதங்களைப் பறிக்கப் பிரதமர் ராஜீவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தி இராணுவத்தை அனுப்பவில்லையே! அதற்கு மாருக விமான நிலையத்துக்குப் பிரதமர் சென்று சிவப்புக் கம்பள வரவேற்பு தந்ததோடு இராணுவ அணி வகுப்பு மரியாதையுமல்லவா வழங்கியிருக்கிருர்!

**கேள்வி:**

ராணுவத்தை அனுப்பவில்லையென்று கண்டித்த கருணாநிதி இப்போது இலங்கைக்கு இந்தியா ராணுவத்தை அனுப்பியிருப்பதை எதிர்ப்பது விசித்திரமாகவும், குறுகிய அரசியல் நோக்கம் கொண்டதாகவும், எம். ஜி. ஆருக்கும் ராஜீவ்காந்திக்கும் இதனுல் புகழ்வந்து விடுமோ என்று கருதுவதாகவும் இருக்கிறது என்று பெரியவர் எம். கல்யாண சுந்தரம் அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிருரே?

**பதில்:**

பல ஆண்டுகளுக்கு முன்பு "சபாபதி" என்ற திரைப் படத்தில் ஒரு காட்சி வருகிறது! முதலாளியொருவன் வேலைக்காரனை அழைத்து "ஒரு சோடா உடைடா!" என்பான்! வேலைக்காரனுக நடித்த காளி என். ரத்தினம் அவர்கள் ஒரு சோடா பாட்டிலை எடுத்துக் கீழே போட்டு உடைப்பார்! "என்னடா இது? நான் சோடா உடைக்கச் சொன்னுல் கீழே போட்டு உடைத்துவிட்டாய்?" என்று முதலாளி கோபிப்பான். "நீங்க உடைக்கச் சொன்னீங்க—நான் உடைத்தேன்!" என்பான் வேலைக்காரன்!

தமிழினத்தைக் குண்டு போட்டு அழிக்கும் சிங்கள ராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தி "தமிழ் ஈழத்தனி நாடு" உருவாக்கித் தருவதற்கு ராணுவத்தை அனுப்பச் சொன்னுல்; தமிழ்ப் போராளிகளிடமுள்ள ஆயுதங்களைப் பறித்து அவர்கள் கோரிய உரிமைகளையும் முடக்குகிற ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு ராணுவத்தை அனுப்பி விட்டு—பழைய சபாபதி படத்து காமெடிக்காட்சியை அல்லவா இவர்கள் நினைவுபடுத்துகிருர்கள். இதை எதிர்ப்பது எப்படி விசித்திரமாக இருக்க முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:**

“இந்தியா இலங்கை ஒப்பந்தத்தை உலகத்தில் எதிர்ப்பவர்கள் இரண்டே இரண்டுபேர்தான். ஒருவர் இலங்கைப் பிரதமர் பிரேமதேசா—மற்றவர் கருணாநிதி” என்று ஒரு அமைச்சர் பேசியிருக்கிறாரே?

**பதில்:**

அரசவைக் கவிஞர் புலமைப்பித்தன் அவர்கள் எதிர்த்திருக்கிறார்—விடுதலைப் புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரன் நேற்று யாழ்ப்பாணத்தில் பேசிய கூட்டத்தில் கூட “இது எங்கள் மீது திணிக்கப்பட்ட ஒப்பந்தம்” என்று அறிவித்திருக்கிறார்—இவர்களையும் இந்த எட்டப்பர் பிரேமதேசாவுடன் சேர்க்கிறாரா? பிரேமதேசாவுக்கு சிங்கள இன உணர்வு இருக்கிறது—எனக்குத் தமிழ் இன உணர்வு இருக்கிறது—எட்டப்பர்களுக்கு பதவி உணர்வைத் தவிர வேறென்ன உணர்வு இருக்கிறது? அடுத்தொரு கட்சி ஆட்சிக்கு வந்தால் அந்தக் கட்சி தலைமைக்கும் ஆலவட்டம் சுழற்றக் காத்துக் கிடக்கும் “ஆயாராம் காயாராம்”களுக்கு இப்படி பேசினால்தான் பிழைப்பே நடக்கும்! தொலைகிறார்கள்; பிழைத்துப் போகட்டும்.

**கேள்வி:**

“ராமாயணத்தில் இலங்கையை மீட்டவர் ராமச்சந்திர மூர்த்தி எனப் படித்துள்ளோம்; இன்று இலங்கையை மீட்டிருப்பவரும் இந்த ராமச்சந்திர மூர்த்திதான்!” என்று அதே அமைச்சர் பேசியிருப்பது பற்றி?

**பதில்:**

பழைய ராமாயணத்தில் “அசோகவனம்”; இப்போது புதிய ராமாயணத்தில் டெல்லி “அசோகா ஓட்டல்”......

**கேள்வி:**

இலங்கையின் அதிபர் கொழும்பு ஒப்பந்தம் செய்து கொண்டு அதை ஆதரித்துப் பேசுவதும், இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமர் பிரேமதேசா அந்த ஒப்பந்தத்தை எதிர்த்துப் பேசுவதும் — எப்படியிருக்கிறது?

பதில்:

எதிர்ப்பது என்பது வேறு — எதிர்ப்பது போல் காட்டுவது என்பது வேறு — "நீ அடிப்பது போல் அடி; நான் அழுவதுபோல் அழுகிறேன்" என்று சில பேர் விளையாட்டு அரசியல் நடத்துவதில்லையா; அந்த ரகத்தைச் சேர்ந்தது தான் "ஜெயவர்த்தனா — பிரேமதேசா அரசியல்!"

கேள்வி:

"ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்திய அரசு முழுக்க முழுக்க எங்கள் பக்கம் இருந்தது" என்று ஜெயவர்த்தனா கூறியிருக்கிருரே?

பதில்:

"பூனைக்குட்டி வெளியே வந்து விட்டது" என்று தந்தை பெரியார் அடிக்கடி சொல்வார். அது; இது போன்ற ஒளித்து வைக்கப்பட்ட ரகசியங்கள் திடீரென அம்பல மாகும் போது சொல்லப்படுகிற வாசகமாகும்!

கேள்வி:

இந்திய இலங்கை ஒப்பந்தத்தை சிங்கள இனவெறி; விரைவில் முறியடித்து விடுமென்றும், இந்த ஒப்பந்தம் விடுதலைப் போராட்டத்தையும் விடுதலைப் புலிகளின் நோக்கத்தையும் நேரடியாக பாதித்துள்ளது என்றும், இந்த ஒப்பந்தம் தமிழ் மக்களையோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளையோ கலந்து பேசாமல் அவசரமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்றும், இது விடுதலைப் புலிகள் மீதும் தமிழ் மக்கள் மீதும் திணிக்கப்படும் ஒப்பந்தம் என்றும், இந்த ஒப்பந்தத்தை நாங்கள் கடுமையாக எதிர்க்கிருேம் என்றும் எங்கள் எதிர்ப்பு பயனற்றது என்றும் — யாழ்ப்பாணத்தில் 4—8—87 மாலை நடைபெற்ற படைக்கலன்கள் ஒப்படைப்பு அறிவிப்புப் பொதுக் கூட்டத்தில் இலட்சக் கணக்கான தமிழ்மக்கள் மத்தியில் பிரபாகரன் அறிவித்துள்ளது பற்றி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதில்:

நயவஞ்சகர்களையும், அந்த நயவஞ்சகர்களுக்கு துணை போகிறவர்களையும், அப்படி துணை போகிறவர்களுக்குத் தோள் கொடுக்கிற சுயநலவாதிகளையும் நம்பியதால் வந்த வினை இது என்பதை பிரபாகரனைப் போன்றவர்கள் வெளிப் படையாகச் சொல்ல முடியாவிட்டாலும் மனதிற்குள் ளாவது இப்போது எண்ணிக் கவலைப்படத்தான் செய் வார்கள். என் செய்வது; கல்தோன்றி மண் தோன்ருக் காலத்துக்கு முன்தோன்றி முத்ததமிழ்க்குடியென்று போற்றப்படும் இந்த இனத்துக்கு இப்படித்தானே சங்கிலித் தொடர் போன்ற "சாபக்கேடுகள்" விளைந்து வருகின்றன! பச்சைக்கொடிக்கும் பச்சைப் பாம்புக்கும் வித்தியாசம் தெரி யாமல் துரோகக்குணம் கொண்டோரிடம் தோழமை கொண்டதால் "வேறு வழியில்லாமல் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்கிருேம்" என்று பிரபாகரன் வேதனையோடு உரை நிகழ்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவர் மீதும் குறை சொல்வதற்கில்லை! அரசுப் பொறுப்பில் இருப் போர், அதிகாரத்தில் இருப்போர் நிழலில் நின்றுதான் தீர வேண்டுமென்ற சூழல், அவர்களுக்கு! பாவம்; நிழல் என்றுதான் நின்ருர்களே தவிர; அந்தப்புலிகள்; "வேடன் நிழலின் கீழ்ப் போய் நின்று விட்டோமே!" என்பதை மிகமிக தாமதமாகத்தான் உணர்ந்தார்கள். அதன் விளைவு; அவர்கள் மீது மட்டுமல்ல; உலகமெங்குமுள்ள தமிழ் இன உணர்வுள்ள மக்கள் உள்ளத்தில் எல்லாம் வேல் பாய்ச் சுகிற நிகழ்ச்சியாக வடிவெடுத்து விட்டது. ஆனல் ஒன்று; தமிழர்கள் பாபப்பட்ட ஜென்மங்களாக—பரிதாபத் திற்குரிய பிறவிகளாக—பொட்டுப் பூச்சிகளாக — புன்மைத் தேரைகளாக—புழுவிலும் கேவலமானவர்களாக — புழுதி மண்ணை விட அற்பமாக — எவனெவனே ஆடுகிற ஆட்டத்துக்கெல்லாம் பகடைக்காய்களாக இன்னும் எத்தனை நாளைக்கு இருக்கப்போகிருர்கள்!

"கொண்டைக்கு ஒரு செண்டு மல்லிகை கேட்டாளாம், கொண்ட கணவனிடம்; அந்தக் குணக்கேடனே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டை உள்ள மட்டும் இவள் சென்று கேட்டுத் தொல்லை தந்தபடிதான் இருப்பாள், எனவே சென்று தேடிடும் சங்கடம் நமக்கு இல்லாமலிருக்க, இவள் கொண்டையை அறுத்தெறிவோம் என்றானாம்''.

இப்படியொரு உவமையை அண்ணா அவர்கள் தம்பிக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டிருப்பது என் நினைவுக்கு வருகிறது!

அப்படியே அந்தக் கல் நெஞ்சன்; கட்டிய மனைவியின் கொண்டையை அறுத்தெறிந்தாலும்-உடனடியாக மறு நாளே அது வளர்ந்திட முடியாவிட்டாலும்—எப்படியும் மீண்டும் வளர்ந்தே தீரும்!

✣

58

118830

R.C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைக் கழக வெளியீடுகள்

| | |
|---|---|
| அண்ணாவின் மாநில சுயாட்சி முழக்கம் | ரூ. 0.50 |
| மாநில சுயாட்சித் தீர்மானம் | 2.00 |
| இன உணர்வு | 0.50 |
| கொள்கையில் கோகினூர் | 1.50 |
| கலைஞர் வாழ்க | 4.00 |
| ஐ.நா. சபைக்கு தலைவர் கலைஞர் முறையீடு | 0.50 |
| எட்டப்பர்கள்! எச்சரிக்கை! | 1.00 |
| தியாக வரலாறு | 1.00 |
| அண்ணா ஜோதி | 0.50 |
| யாரால் ? யாரால்? | 1.00 |
| ஆந்திராவும் இந்திராவும் | 1.00 |
| இந்திய ஜனநாயகம் எங்கே போகிறது? | 1.50 |
| கலைஞர் மேலவைப் பேருரை | 1.50 |
| கலைஞர் மேதின முழக்கம் | 1.00 |
| இது ஓர் இனமானப் போர் | 4.00 |
| எதிர் கட்சிகளுக்கு ஏன் இந்த அநீதி | 2.00 |
| இலங்கையில் தமிழினம் அழியலாமா? | 1.50 |
| தலைத்தாழாச் சிங்கம் தந்தை பெரியார் | 2.00 |
| டெசோ தீர்மானங்கள் | 0.50 |
| தமிழனுக்கு ஒருநாடு தமிழ் ஈழநாடு | 3.00 |
| அக்கினிக் குஞ்சு | 2.00 |
| இந்தியா—இந்தியாவா? | 2.00 |
| எம். ஜி. ஆர். ஆட்சியில் | |
| அண்ணா அறிவாலயத்திற்குத் தடையா? | 1.50 |
| கடவுள் மீது பழி | 1.50 |
| எம்.ஜி.ஆர். ஆட்சியில் ஊராட்சி மன்ற ஊழல்களும் | |
| உதவாக்கரை ஆணைகளும் | 2.00 |
| வீரமணிவென்றிடுக வெற்றிமணி ஒலித்திடுக | 0.50 |
| புதிய கல்வித்திட்டத்தில் இந்தி திணிப்பு- | |
| ஏழைகளின் புறக்கணிப்பு | 1.00 |
| திசை திருப்பும் படலம் | 1.50 |
| புள்ளிகள் | 1.00 |
| ஒதுக்கிய நிதியினை ஒதுக்கியவர் யாரோ? | 3.00 |
| மொழிப்போர் முரசம் | 0.50 |
| சீருப் புராணம் | 1.00 |
| **DMK on State Autonomy** | 2.00 |
| **The Need of the Hour** | 1.00 |
| **Tamil Eelam-DMK Stand** | 1.50 |

Gem Press, Madras - 600 001.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org